## மாற்றுத்திறனாளியான சபரிவர்மனை – த.வெ.க. அரசின் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் சென்று கொன்றுள்ளது!

# 60 நாட்களில் 4 காவல்துறை மரணங்கள் - ரீல்ஸ் வேண்டாம்! நீதி வேண்டும்!

## கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அறிக்கை!



சென்னை, ஜூலை 16–

கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் இ.பரந்தாமன் அளித்துள்ள பேட்டி வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டம் தென் தாமரைக்குளத்தைச் சேர்ந்த சபரிவர்மன் என்கின்ற ஒரு மாற்றுத்திறனாளி சகோதரரை படுகொலை செய்துள்ளது விஜய் அரசு. மாற்றம் என சொல்லி வந்த இந்த அரசில் பிண நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது.

கைது செய்யப்பட்ட ஒருவரை சிறையில் அடைப்பதற்கு முன், அவரை நீதித்துறை மாஜிஸ்திரேட் முன்பு ஆஜர்படுத்த வேண்டும். அதற்கு முன் மருத்துவ பரிசோதனை செய்து, “Medically fit to remand” என்ற சான்றிதழ் பெறப்பட வேண்டும். அந்த மருத்துவத் தகுதி சான்றிதழ் பெறப்பட்ட பிறகே அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, பின்னர் சிறைக்கு அனுப்ப முடியும்.

**குடும்பத்தினர் பார்க்க அனுமதியில்லை!**

அவ்வாறு மருத்துவ ரீதியாக தகுதி உள்ளவர் என்ற சான்றிதழ் பெறப்பட்ட பிறகு, சபரிவர்மன் சிறைக்கு அனுப்பப் பட்டதாக கூறப்படுகிறது. பத்தாம் தேதி வெள்ளிக்கிழமை அன்று குடும்பத்தினர் சிறைச்சாலைக்கு சென்று அவரை சந்தித்ததாகவும், அப்போது அவர் நலமுடன் இருந்ததாகவும், நன்றாக பேசிக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால், பதிமூன்றாம் தேதி, சிறைச்சாலை யிலிருந்து காவல்துறை மூலமாக குடும்பத்தினருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சபரிவர்மன் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என்று தகவல் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. மருத்துவமனைக்கு சென்ற குடும்பத்தினர் சபரிவர்மனை பார்க்க அனுமதி வழங்கப்படவில்லை. நீண்ட நேரம் காத்திருந்து வலியுறுத்திய பிறகு, அவர் பிணவரையில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளனர். அதன் பிறகுதான் அவர் உயிரிழந்துவிட்டார் என்ற தகவல் குடும்பத்தினருக்கு தெரிய வந்துள்ளது.

**“டைவெர்டிங் பாலிடிக்ஸ்”**

பத்தாம் தேதி நலமாக இருந்த சபரிவர்மன், பின்னர் மரணம் அடைந்ததாக காவல்துறை தெரிவித்ததைத் தொடர்ந்து, அந்த பகுதியில் குடும்பத்தினர் பெரிய அளவில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் சில ஊடகங்களில் மட்டும் வெளியாகி உள்ளது. அதே நேரத்தில், முதலமைச்சர் பெரம்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, இந்த சம்பவத்திலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையில் நடந்து கொண்டார். இந்த அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து “டைவெர்டிங் பாலிடிக்ஸ்” மட்டுமே செய்து வருகிறது என்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறது.

இருநூறு கிராம் குட்கா வைத்திருந்த மாற்றுத்திறனாளி ஒருவரை அடித்துக் கொலை செய்துள்ளது காவல்துறை. ஆனால் அதே சமயம் 40 கோடி ரூபாய் குட்கா கம்பெனிகளிடம் லஞ்சமாக பெற்ற குட்கா விஜய்பாஸ்கரை சிவப்பு கம்பளம் விரித்து கட்சியில் இணைத்துக்கொண்டுள்ளது. இதுதான் இன்றைய விஜய் அரசின் மாற்றம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், மடப்புரம் கோவில் காவலாளி அஜீத் குமார் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவத்தின் போது விஜய் மேடை போட்டு பேசினார்.

அப்போது நடந்த சம்பவத்திற்காக பொறுப்பேற்று அவர் குடும்பத்திடம் எங்களது தலைவர் மன்னிப்பு கேட்டார். ஆனால் அப்போது சாரி வேண்டாம் எங்களுக்கு நீதி வேண்டும் என பேசினார் விஜய். இன்று அவரைப் பார்த்து “ரீல்ஸ் வேண்டாம்; எங்களுக்கு நீதி வேண்டும்” என்று தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள்.

அஜீத் குமார் கொலல்ப்பட்ட வழக்கில் காவல்துறை சம்மந்தப்பட்டு இருந்ததால் விமர்சனங்கள் ஏதும் எழ கூடாது என வழக்கை தானாக முன்வந்து CBI க்கு மாற்றி உத்தரவிட்ட எங்களது முதலமைச்சர் எங்கே, இன்று சபரிவர்மன் கொல்லப்பட்டதை கண்டும் காணாமல் ஓடு ஓடு என ஓடும் இவர் எங்கே.? இந்த அரசு பிரச்சனைகளை கண்டு ஓடுகிற மாடல் அரசா.? பிரச்சனை என்றால் பதுங்குகிற அரசா .? என்ற கேள்வி தமிழ் நாட்டு மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது.

இந்த த.வெ.க. அரசு பொறுப்பேற்ற 60 நாட்களில் மட்டும் இதுபோன்ற 4 சம்பவங்கள் நடந்துள்ளன.

சென்னை எம்.ஜி.ஆர். நகரில் வெங்கடேஷ் என்ற காவலாளி காவல்துறையால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பிறகு, மறுநாள் உயிரிழந்துள்ளார். திருச்சியில் ஸ்ரீராம் என்ற நபர் காவல்துறையால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் அவர் வீட்டில் தூக்கிட்டு உயிரிழந்ததுள்ளார். கிருஷ்ணகிரியில் 17 வயது சிறுவனுடன் காவல்துறை அதிகாரி ஒருவர் தகராறு செய்து, அவரது செல்போனை பறிமுதல் செய்ததால், அந்த சிறுவன் தற்கொலை செய்துகொண்டுள்ளார். தென்காசி அருகே சிவகிரியில், அந்தோணிராஜன் என்ற முதியவர் காவல்துறை விசாரணைக்கு அழைக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டதால் தற்கொலை செய்துகொண்டுள்ளர். இப்படி அறுபதே நாட்களில் காவல்துறையால் நான்கு மரணங்கள் நடந்துள்ளன.

**சட்டம் அனைவருக்கும் சமம்!**

“ஆளுக்கொரு நீதி ஆளுக்கொரு சட்டமா.? சட்டம் அனைவருக்கும் சமம்” ஆனால் இப்போது தவெக நிர்வாகிகளுக்கு ஒரு சட்டம் மற்றவர்களுக்கு வேறு ஒரு சட்டம் தான் நடைமுறையில் உள்ளது என்று பேச்சாளர் குற்றம்சாட்டுகிறார்.

ஈரோடு பவானியை சேர்ந்த அருண் என்ற தவெக நிர்வாகி 140 கிலோ குட்கா கடத்தியதா கைது செய்யபட்டார். அவர் ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன்பு குட்கா கடத்தி குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர். அப்படி இருக்கும் நபர் மீண்டும் கைது செய்யப்பட்ட போது அவரை உடனடியாக ஸ்டேஷன் ஜாமீனில் விடுவித்துள்ளனர் காரணம் அவர் தவெக நிர்வாகி. கரூர் குளித்தலை பகுதியில் ஒரு பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த தவெக ஒன்றிய செயலாளர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுமக்களே சென்று அவரை தண்டித்துள்ளனர். ஸ்ரீவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சரவணன் மீது விஜய் ரசிகர் மன்ற ரசிகையே புகார் கூறி உள்ளார் இதுவரை எந்த நவடிக்கையும் இல்லை. ஆனால் அந்த எம். எல். ஏ விற்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு கொடுத்துள்ளனர். அதேபோல திருப்பூரில் பத்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள கஞ்சா கடத்திய தவெக கட்சி நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் அவருக்கெல்லாம் எந்தவித டார்ச்சரும் இல்லை ஏன் என்றால் அவர் தவெக நிர்வாகி. ஆனால் சாதாரண மாற்றுத்திறனாளியை 200 கிராம் குட்கா வைத்திருந்ததாக கூறி விசாரணைக்கு அழைத்து சென்று கொலை செய்துள்ளது.

கடந்த எங்களது ஆட்சியில் இது போன்றதொரு சம்பவம் நடந்த போது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-ன் கீழ் வழக்கு பதிவு செய்தோம். இந்தியாவிலேயே முதல்முறையாக கொலை வழக்கு பதிந்து விசாரணை நடத்தியது எங்களது அரசு. ஆனால் இந்த அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிறைச்சாலையில் பணியாற்றிய ஜெயிலர் மற்றும் வார்டன்கள் ஜெகன், சிவக்குமார் ஆகியோர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

**உடல் எங்கும் காயம்!**

இன்று மாஜிஸ்திரேட் உடலைப் பார்த்தபோது அவரது உடலில் பல்வேறு காயங்கள் இருந்துள்ளன. அவரது கால்கள் கட்டப்பட்டிருந்தன, கைகளில் காயங்கள் இருந்தன, ஆண் உறுப்பில் காயம் இருந்தது, நெஞ்சுப் பகுதியில் காயம் இருந்தது என்று மாஜிஸ்திரேட் தனது அறிக்கையில் பதிவு செய்துள்ளார். அவர் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்ற பிறகு எவ்வாறு மரணம் அடைந்தார் என்பதற்கு இந்த அரசு இதுவரை தெளிவான விளக்கம் அளிக்கவில்லை. காவல்துறைக்கு பொறுப்பான முதலமைச்சர் விஜயும் இதுவரை எந்த பதிலும் அளிக்கவில்லை. அவருக்கே இந்த தகவல் தெரியுமா என்ற சந்தேகம் எழுகிறது. குதிரை பேரத்தில் ஈடுபட்டு குதிரைகளை விலைக்கு வாங்கும் விஜய் அரசாங்கத்திற்கு மனித உயிரின் மதிப்பு தெரியவில்லை. குற்றவாளி தவெக கட்சியை சார்ந்தவர் என்றால் ஜாமீன் மற்றவர்கள் என்றல் மரணம். இந்த வழக்கில் முறையான விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இதில் தொடர்புடைய காவலர்கள் கைது செய்யபடவேண்டும். ரீல்ஸ் முதலமைச்சராக இல்லாமல் ரியல் முதலமைச்சராக இருக்க வேண்டும். படத்தில் ஹீரோவாக இருக்கலாம் ஆனால் ஆட்சி அதிகாரத்தில் இன்று ஜீரோவாக உள்ளீர்கள். பாதிக்கபட்ட குடும்பத்திற்கு உரிய நீதி வழங்கவேண்டும். தேவைப்பட்டால் திமுக நீதிமன்றத்திற்குச் செல்லும்.

இவ்வாறு அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

---

## த.வெ.க. ஆட்சியில் கொடூரம்:

# நாகர்கோவில் சிறையில் மாற்றுத்திறனாளி அடித்துக் கொலை!

## 3 போலீசார் கைது!

நாகர்கோவில், ஜூலை 15 –

நாகர்கோவிலில் உள்ள மாவட்ட சிறையில் விசாரணை கைதியான மாற்றுத்திறனாளி வியாபாரி சபரிவர்மன் கட்டி வைத்து சித்ரவதை செய்து அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது உடலில் கை முறிவு உட்பட 19 இடங்களில் காயங்கள் இருந்தது பிரேத பரிசோதனையில் அம்பலாகி உள்ளது. இதுதொடர்பாக சிறை காவலர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குமரி மாவட்டம் தென்தாமரைக்குளம் அருகே ஈத்தங்காடு நாராயணன்புதூரை சேர்ந்தவர் சசிதரன்.

இவரது மகன் சபரிவர்மன் (34). மாற்றுத்திறனாளியான இவர், ஈத்தங்காட்டில் மளிகை கடை நடத்தி வந்தார். கடந்த 9ம்தேதி இவரது கடையில் சோதனை நடத்திய தென்தாமரைக்குளம் போலீசார், தடை செய்யப்பட்ட குட்கா, புகையிலை பொருட்கள் இருந்ததாக கூறி சபரிவர்மனை கைது செய்து நாகர்கோவில் சிறையில் அடைத்தனர். நேற்று முன்தினம் அதிகாலையில் சபரிவர்மன் மயக்க நிலையில் கிடந்ததாக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அதிகாரிகள் கொண்டு வந்துள்ளனர்.

அங்கு பரிசோதனையில் சபரிவர்மன் உயிரிழந்தது தெரிய வந்தது. உடனடியாக அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். இந்த தகவல் சபரிவர்மனின் குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டது. அதிர்ச்சி அடைந்த அவர்கள், சபரிவர்மனை போலீசார் சரமாரி தாக்கி கொன்றுள்ளனர். இறப்புக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவரது மனைவிக்கு ரூ.1 கோடி நிவாரணம் மற்றும் அரசு வேலை வழங்க வேண்டும் என கூறி சாலைமறியலில் ஈடுபட்டனர். எஸ்பி ஸ்டாலின் தலைமையில் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இந்நிலையில் 2வது ஜூடிசியல் மாஜிஸ்திரேட் சத்தியமூர்த்தி முன்னிலையில் சபரிவர்மனின் உடலை நேற்று பகல் 12 மணிக்கு தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய அரசு மருத்துவமனை டாக்டர்கள் குழு பிரேத பரிசோதனை செய்தனர். அதன் பின் நீதிபதி நேற்று சிறைச்சாலையிலும் விசாரணை நடத்தினார். எஸ்பி ஸ்டாலின், நெல்லை சிறைத்துறை எஸ்பி செந்தாமரை கண்ணன் ஆகியோரும் சிறையில் கைதிகளிடமும், காவலர்களிடமும் விசாரணை நடத்தினர். அங்குள்ள கண்காணிப்பு கேமராக்களையும் ஆய்வு செய்தனர்.

நேற்று காலை 10 மணிக்கு தொடங்கிய விசாரணை சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்தது. அதில், சபரிவர்மன் பெட்டிக்கடையில் 5 புகையிலை பாக்கெட்டுகளை கைப்பற்றிய போலீசார் அவர் மீது வழக்குபதிவு செய்து மாலை நீதிமன்றத்தில் ஜாமீன் பெறவேண்டும் எனக்கூறி விடுவிக்கின்றனர். பின்னர் சிறுவர்களுக்கு புகையிலை விற்றதாக கூறி அவர் நாகர்கோவில் கிளைச் சிறையில் அடைக்கப்படுகிறார். சிறையில் இரு நாட்கள் எதுவும் சாப்பிடாமல் இருந்ததுடன், 12ம் தேதி இரவு 9 மணிக்கு தனது குழந்தைகளை பார்க்க வேண்டும்.

என்னை விடுவியுங்கள் எனக் கூறி அலறியதாக தெரிகிறது. அப்போது ரவுண்ட்ஸ் வந்த வார்டன் ஜெகன், சபரிவர்மனை தாக்கி சத்தம் போடாதே எனகூறி கட்டி போட்டுள்ளார். பின்னர் சிறிது நேரம் கழித்து சபரிவர்மனின் கட்டை அவிழ்த்து மீண்டும் தாக்கியுள்ளார். தாக்கப்பட்ட சபரிவர்மன் இரவே இறந்ததாக தெரிகிறது. அதிகாலை 5.40 மணிக்கு ரோல்காலின் போது சபரிவர்மன் மட்டும் வரவில்லை. ஜெகன் சென்று பார்த்தபோது, சபரிவர்மன் இறந்தது தெரிய வந்தது.

அடுத்து ஷிப்ட் வந்த சிவக்குமார் இதனை கண்டு கொள்ளாமல் இருந்துள்ளனர் என்பது தெரிய வந்தது. இந்தநிலையில் சபரிவர்மனின் 4 பக்க பிரேதப் பரிசோதனை அறிக்கை நேற்று இரவு அவரது உறவினர்களிடம் அளிக்கப்பட்டது. இதில் அவரது உடலில் 19 இடங்களில் கடுமையான காயங்கள் இருப்பதும், அவர் சித்ரவதை செய்யப்பட்டதற்கான ஆதாரங்களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

அறிக்கையின்படி, சபரிவர்மனின் வலது முன்னங்கை மற்றும் வலது காலின் கீழ்ப்பகுதியில் கட்டி வைக்கப்பட்டதற்கான அடையாளங்கள் இருப்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அவர் சிறைக்குள் கட்டி வைத்து தாக்கப் பட்டிருப்பது, வலது கையில் பலத்த ரத்தக்கட்டு இருப்பதுடன், அங்கு எலும்பு முறிந்திருப்பதும், தோலுக்கு அடியில் பல இடங்களில் ரத்தம் உறைந்து போயிருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

மண்டை ஓட்டைப் பிரித்து ஆய்வு செய்தபோது, சபரிவர்மனின் உச்சந்தலையில் தடிமனான ரத்தக்கட்டும், பிடரி பகுதியில் ஆழமான காயமும் இருப்பது தெரிய வந்துள்ளது. ஏற்கனவே சபரிவர்மனின் உறவினர்கள், அவரது உடலில் காயம் இருப்பதாக குற்றம் சாட்டியிருந்தனர். தற்போது வெளியாகியுள்ள மருத்துவ அறிக்கையில் எலும்பு முறிவு உட்பட 19 காயங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால், சபரிவர்மன் அடித்து கொலை செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும், மனைவிக்கு அரசு வேலை வழங்க வேண்டும், அதுவரை உடலை வாங்கப்போவது இல்லை என்று கூறிவிட்டு மனைவி மற்றும் உறவினர்கள் நேற்று இரவு சொந்த ஊருக்கு புறப்பட்டு சென்றனர்.

இந்நிலையில், போஸ்ட்மார்ட்டம் அறிக்கை, மாஜிஸ்திரேட் அறிக்கை மற்றும் விசாரணையில் கிடைத்த தகவல் அடிப்படையிலும் சபரிவர்மனை அடித்து கொலை செய்த சிறை வார்டன் தேங்காப்பட்டணத்தை சேர்ந்த ஜெகன், அதனை கண்டு கொள்ளாத 2ம் நிலை காவலர் சாமியார்மடம் சிவகுமார், இரவு சிறை பொறுப்பாளராக இருந்த களக்காட்டை சேர்ந்த தலைமை சிறை காவலர் சுரேஷ் என்ற திருமலை நம்பி ஆகிய 3 பேரை நேசமணி நகர் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் 3 போலீசாரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

**ரூ.25 ஆயிரம் லஞ்சம் கொடுக்காததால் கைது!**

ஒரு சிறிய பெட்டிக்கடையில் சில பாக்கெட்டுகள் மட்டும் குட்கா பிடிபட்டால்,பொதுவாக உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் அபராதம் விதித்து விடுவார்கள் அல்லது காவல் நிலையத்தில் ஜாமீன் வழங்கக்கூடிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்வார்கள்.

ஆனால், அந்த நபர் மொத்த விற்பனையாளராகவோ அல்லது பெரிய அளவில் பதுக்கி வைத்திருப்பவராகவோ இருந்தால், அவர் உடனடியாக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ரிமாண்ட் செய்யப்படுவார். ஆனால் சபரிவர்மன் விஷயத்தில் அவரை வழக்கில் இருந்து விடுவிக்க போலீசார் ரூ.25 ஆயிரம் லஞ்சம் கேட்டு பேரம் பேசியுள்ளனர், அவர் கொடுக்க மறுப்பு தெரிவித்ததால் கைது செய்து கூடுதல் பிரிவுகளை சேர்த்து ரிமாண்ட் செய்துள்ளனர்.

**அமைச்சர் தலையீடு!**

தவெக அரசின் அமைச்சர் ஒருவர் சபரிவர்மனை தாக்கியவர்களை கைது செய்யவோ, அவர்கள் மீது நடவடிக்கையோ உடனே எடுக்க வேண்டாம் என்று கூறியதாகவும், அதனால் காவல்துறை கையை பிசைந்து கொண்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது. எனவே தான் அரசியல் கட்சிகள், ஊர் மக்கள் உள்ளிட்டவர்களிடம் இருந்து கணவன் உயிரிழந்த அதே ஜெயிலுக்குள் மனைவியையும், அவரது சகோதரியையும் மட்டும் அழைத்து சென்று பேச்சு வார்த்தை நடத்த திட்டமிட்டதும் தெரியவந்தது.

---

## ஓடாத படம்!



பதவி ஏற்பு
நிகழ்வையே
பட்டிமன்ற
மேடையாக்கி

சட்டமன்றத்தையும்
சைகை செய்யும்
கூடமாக்கி

பள்ளி வகுப்புகளை
கை படாத
சீடியாக்கி

ரீல்ஸ்களை
மூதலீடு
ஈர்க்கும் மாடலாக்கி

சி.எம். அறையையும்
செல்ஃபி எடுக்கும்
பீடமாக்கி

ஓடு..ஓடு..
என்பதையே
கோட்டு மாடல்
பாடலாக்கி

ஏ.டி.எம் அட்டையால்
பவுடராக்குவதை
பாடமாக்கி

ஊரெல்லாம்
இருள்சூழ
மின்வெட்டை
பரவலாக்கி

பலநூறு
கோடி ரூபாய்
பழநிமலை
முருகன் சொத்தை

ரெண்டே கோடிக்கு
பதிவு செய்து
ஊழலாக்கி

நீதி மன்ற
நியமனங்களை
நிதி வசூலுக்கு
ஏலமாக்கி

அறுதிப்
பெரும்பான்மைக்கு
பனையூர்
சந்தையை
கழுதைப்
பேரமாக்கி

ஓடாத
சுறா படமாய்
ரெண்டு மாத
ஆட்சி என்றால்

ஓட்டுப் போட்ட
விரலையே
கடிச்சுத் துப்பும்
கடுப்பில்
ஊருசனம்
அன்றோ..

என்னநாஞ்
சொல்றது



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்